**டிசம்பர் – 14**

# TNPSC துளிகள்

- தொற்றா நோய்கள் (non-communicable diseases - NCDs) குறித்த ஒரு ஆராய்ச்சியை ஊக்குவிப்பதற்காக ஒரு சுகாதார நலப் புத்தாக்க மையத்தை அமைப்பதற்கு இந்தியாவும் சுவீடனும் ஒன்றாக இணைந்துள்ளன.
  - 2019 ஆம் ஆண்டானது சுகாதாரத் துறையில் இந்தியா - ஸ்வீடனின் 10 ஆண்டு கால ஒத்துழைப்பைக் குறிக்கும் ஸ்வீடன் - இந்தியாவின் சுகாதார ஆண்டைக் குறிக்கின்றது.
- ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் போர் மற்றும் போர்த் தந்திரத் திறன்களை மேம்படுத்துவதற்காக "அயர்ன் யூனியன் 12" என்ற ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியைத் தொடங்கியுள்ளன.

# தேசியச் செய்திகள்

## தாத்ரா - நாகர் ஹவேலி மற்றும் டாமன் - டையூ (ஒன்றியப் பிரதேசங்கள் இணைப்பு) மசோதா, 2019

- இந்த மசோதாவை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அறிமுகப் படுத்தினார்.
- இந்த மசோதாவானது தாத்ரா - நாகர் ஹவேலி மற்றும் டாமன் - டையு ஆகிய இரண்டு ஒன்றியப் பிரதேசங்களை ஒரே ஒன்றியப் பிரதேசமாக ஒன்றிணைக்க அனுமதிக்கின்றது.
- சிறப்பான நிர்வாகத்திற்காகவும் பல்வேறு பணிகளின் மிகுதல் தன்மையை (இரட்டிப்பாதல் / duplications) சரி பார்க்கவும் இந்த இரண்டு ஒன்றியப் பிரதேசங்கள் ஒன்றாக இணைக்கப்பட இருக்கின்றன.
- இந்த இணைப்புடன் சேர்த்து, தற்போது இந்தியாவில் மொத்தம் எட்டு ஒன்றியப் பிரதேசங்கள் இருக்கும்.

### *அரசியலமைப்பின் திருத்தம்*

- இந்த மசோதாவானது தாத்ரா - நாகர் ஹவேலி மற்றும் டாமன் – டையூ ஆகிய இரண்டு ஒன்றியப் பிரதேசங்களை ஒன்றிணைப்பதற்கு முதலாவது அட்டவணையைத் திருத்துகின்றது.
- இந்த மசோதாவானது இணைக்கப்பட்ட இந்த ஒன்றியப் பிரதேசத்திற்கு மக்களவையில் இரண்டு இடங்களை ஒதுக்க நான்காவது அட்டவணையில் திருத்தம் செய்ய முயல்கின்றது.
- உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு: மும்பை உயர் நீதிமன்றமானது இந்த இணைக்கப்பட்ட ஒன்றியப் பிரதேசத்திற்கான உயர் நீதிமன்றமாக தொடர்ந்து செயல்படும்.
- ஒன்றியப் பிரதேசங்களின் கீழ் உள்ள பணிகள்: தற்போதுள்ள ஒன்றியப் பிரதேசங்களின் விவகாரங்கள் தொடர்பாகப் பணியாற்றும் ஒவ்வொரு பணியாளரும் இந்த இணைக்கப்பட்ட ஒன்றியப் பிரதேசத்திற்குத் தற்காலிகமாகப் பணியாற்றுவார்கள்.




## காந்தி கலைக் களஞ்சியம்

❖ பொருத்தமான காந்தியத் தத்துவத்தை ஊக்குவிப்பதற்காக 'காந்தி கலைக் களஞ்சியம்' என்ற ஒரு திட்டத்திற்கு மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

❖ இந்தத் திட்டமானது கொல்கத்தாவில் உள்ள தேசிய அறிவியல் அருங்காட்சியக மன்றத்தினால் (National Council of Science Museums - NCM) செயல்படுத்தப்பட இருக்கின்றது.

*தேசிய அறிவியல் அருங்காட்சியக மன்றம் பற்றி:*

❖ இது மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.

❖ கொல்கத்தாவைத் தலைமையிடமாகக் கொண்ட இந்த அமைப்பு 1978 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.

## பிம்ஸ்டெக் அமைப்பில் உள்ள நாடுகளுக்கான காலநிலை சார்ந்த நவீன (திறன்மிகு) வேளாண் முறைகள் குறித்த சர்வதேசக் கருத்தரங்கு

❖ பிம்ஸ்டெக் அமைப்பில் உள்ள நாடுகளுக்கான காலநிலை சார்ந்த நவீன (திறன்மிகு) வேளாண் முறைகள் குறித்த சர்வதேசக் கருத்தரங்கானது புது தில்லியில் தொடங்கி இருக்கின்றது.

❖ இது மத்திய வேளாண் & விவசாயிகள் நலத் துறை அமைச்சகம் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி மன்றம் (Indian Council of Agricultural Research - ICAR) ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

❖ இந்தக் கருத்தரங்கானது காலநிலை மாற்றத்திற்கு உகந்த வெப்பமண்டல குறு நில விவசாய முறையை மேம்படுத்துவதையும் அதிக உற்பத்தித் திறனை அளிப்பதையும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ காலநிலை சார்ந்த திறன்மிகு விவசாயத்திற்கான உலகளாவிய கூட்டணியின் கருத்தரங்கானது உணவு மற்றும் வேளாண் அமைப்பினால் (FAO - Food and Agriculture

Organization) நடத்தப் பட்டது.

***BIMSTEC பற்றி***

- பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு (Bay of Bengal Initiative for Multi-Sectoral Technical and Economic Cooperation - BIMSTEC) என்பது பூடான், வங்க தேசம், இந்தியா, மியான்மர், நேபாளம், இலங்கை, தாய்லாந்து ஆகிய ஏழு உறுப்பு நாடுகளைக் கொண்ட ஒரு பிராந்திய அமைப்பாகும்.
- இந்தத் துணைப் பிராந்திய அமைப்பானது 1997 ஆம் ஆண்டில் பாங்காக் பிரகடனத்தின் மூலம் நடைமுறைக்கு வந்தது.

## NAVARMS – 19

- கடற்படைகளின் ஆயுத அமைப்புகள் குறித்த சர்வதேசக் கருத்தரங்கு மற்றும் கண்காட்சியின் 4வது பதிப்பான "NAVARMS – 19" புது தில்லியில் உள்ள பாதுகாப்பு ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வு நிறுவனத்தில் (Institute for Defence Studies and Analysis - IDSA) உள்ள மேம்பாட்டுப் பகுதியில் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டுப் பதிப்பிற்கான கருத்துரு, "இந்தியாவில் தயாரிப்போம் - போர் வகை: வாய்ப்புகள் மற்றும் கட்டாயங்கள்" என்பதாகும்.
- இந்தியத் தொழில்துறைக் கூட்டமைப்புடன் (Confederation of Indian Industry - CII) இணைந்து இந்தியக் கடற்படையானது 2007 ஆம் ஆண்டு முதல் 'NAVARMS' என்ற கண்காட்சியை நடத்தி வருகின்றது.
- கடற்படை ஆயுத அமைப்புகள் குறித்து இந்தியாவில் நடத்தப்படும் ஒரே சர்வதேசக் கருத்தரங்கு மற்றும் கண்காட்சி NAVARMS ஆகும்.

## சிறந்த காவல் நிலையங்களின் பட்டியல்

- நாட்டில் சிறப்பாகச் செயல்படும் காவல் நிலையங்களின் பட்டியலை மத்திய உள்துறை அமைச்சகம் தயாரித்துள்ளது.
- அந்தமான் நிக்கோபார் தீவுகளில் உள்ள அபெர்டீன் இந்தியாவின் சிறந்த காவல் நிலையமாகத் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் அதைத் தொடர்ந்து குஜராத்தில் உள்ள பாலசினோர் காவல் நிலையம் மற்றும் மத்திய பிரதேசத்தில் உள்ள அஜ்க் புர்ஹான்பூர் காவல் நிலையம் ஆகியவை சிறந்த காவல் நிலையங்களாக தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளன.
- தமிழ்நாட்டில் உள்ள தேனி காவல் நிலையம் இந்தப் பட்டியலில் 4வது இடத்தில் உள்ளது.
- இந்த தரவரிசையானது ஒரு காவல் நிலையத்தில் பதிவாகும் குற்றங்களின் எண்ணிக்கையை நிவர்த்தி செய்வது போன்ற அளவுருக்களின் அடிப்படையில் தயாரிக்கப் பட்டுள்ளது.

| State | District | Police Station | Ranking |
|---|---|---|---|
| Andaman & Nicobar Islands | Andaman | Aberdeen | 1 |
| Gujarat | Mahisagar | Balasinor | 2 |
| Madhya Pradesh | Burhanpur | Ajk Burhanpur | 3 |
| Tamil Nadu | Theni | AWPS Theni | 4 |
| Arunachal Pradesh | Dibang Valley | Anini | 5 |

# சர்வதேசச் செய்திகள்

## வளைகுடா ஒத்துழைப்புக் குழுவின் 39வது உச்சி மாநாடு

- வளைகுடா ஒத்துழைப்புக் குழுவின் (Gulf Cooperation Council - GCC) 39வது உச்சி மாநாடானது சவூதி அரேபியாவின் ரியாத்தில் நடந்தது.
- இந்த உச்சி மாநாட்டின் முடிவில், GCC ஆனது 'ரியாத் பிரகடனத்தை' வெளியிட்டது.
- GCC உச்சி மாநாட்டின் 40வது உச்சி மாநாடானது ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற இருக்கின்றது.

### *GCC பற்றி*

- GCC என்பது அரேபிய தீபகற்பத்தில் உள்ள நாடுகளின் அரசியல் மற்றும் பொருளாதாரக் கூட்டணியாகும்.
- இது சமூக - பொருளாதார, பாதுகாப்பு மற்றும் கலாச்சார ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக 1981 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- GCC அமைப்பில் உள்ள உறுப்பு நாடுகள்: ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன், சவுதி அரேபியா, ஓமன், கத்தார், மற்றும் குவைத்.

## உலகின் புதிய நாடு: போகன்வில்

- தென் பசிபிக் தீவுக் கூட்டத்தில் உள்ள போகன்வில் தீவானது பப்புவா நியூ கினியாவிலிருந்துப் பிரிந்து ஒரு சுதந்திர நாடாக உருவாவதற்கு அந்நாடு வாக்களித்து இருக்கின்றது.
- போகன்வில் தீவானது உலகின் புதிய மற்றும் சிறிய சுதந்திர நாடாக உருவெடுக்க இருக்கின்றது.
- பங்கூனா சுரங்கமானது (போகன்வில் செம்பு சுரங்கம் என்றும் அழைக்கப்படுகின்றது) உலகின் மிகப்பெரிய செம்பு (தாமிரம்) இருப்புக்களைக் கொண்டிருக்கின்றது.
- இது உலகின் ஒரு மிகப்பெரிய திறந்த - வெளிச் செம்பு சுரங்கமாகும்.
- இந்நாட்டில் அதிகமாகப் பேசப்படும் மொழி ஹாலியா மொழியாகும்.
- ஐக்கிய நாடுகள் சபையில் இந்நாடு தனது அங்கீகாரத்தை இன்னும் நிரூபிக்கவில்லை.





## உலகின் முன்னணியில் உள்ள விளையாட்டுச் சுற்றுலா செல்வதற்கான இடம் – அபுதாபி

- அபுதாபி நகரமானது தொடர்ந்து ஏழாவது முறையாக உலகின் முன்னணியில் உள்ள விளையாட்டுச் சுற்றுலா செல்வதற்கான ஒரு இடமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- இந்த முறை ஓமனின் மஸ்கட்டில் நடத்தப்பட்ட உலகப் பயண விருதுகளின் (World Travel Awards - WTA) 26வது பதிப்பில் இந்த விருது அந்நகரத்திற்கு வழங்கப்பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ரிசாட்-2பி ஆர்1

- இந்தியாவின் 50வது துருவ செயற்கைக்கோள் ஏவு வாகனம் - சி48 ஆனது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 12 அன்று வெற்றிகரமாக விண்ணுக்குச் செலுத்தப்பட்டது.
- இது ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தின் (Satish Dhawan Space Centre - SDSC) ஏவு தளத்திலிருந்து வணிக ரீதியிலான ஒன்பது செயற்கைக் கோள்களுடன் ரிசாட் - 2 பிஆர் 1ஐ விண்ணுக்கு எடுத்துச் சென்றது.
- இந்த வெற்றிகரமான திட்டமானது ஸ்ரீஹரிகோட்டாவின் SDSC ஏவு தளத்தில் இருந்து செலுத்தப்பட்ட 75வது விண்கலமாகும்.
- இது ஒரு ரேடார் உருவமாக்கல் புவிக் கண்காணிப்பு செயற்கைக்கோள் ஆகும்.
- இது விவசாயம், வனம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆகிய துறைகளில் சேவைகளை வழங்குகின்றது.
- இதன் பணிக் காலம் 5 ஆண்டுகள் ஆகும்.
- இதன் ஒன்பது வாடிக்கையாளர் செயற்கைக் கோள்கள் இஸ்ரேல், இத்தாலி, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவையாகும்.
- இந்த செயற்கைக் கோள்கள் நியூ ஸ்பேஸ் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்துடன் இணைந்து ஒரு வணிக ஏற்பாட்டின் கீழ் ஏவப்பட்டன.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## IUCN ஆனது 1840 புதிய உயிரினங்களை சிவப்புப் பட்டியலில் அச்சுறுத்தப்பட்ட உயிரினங்களின் பிரிவில் சேர்த்துள்ளது

- பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கமானது (International Union for the Conservation of Nature - IUCN) அதன் புதுப்பிக்கப்பட்ட "அச்சுறுத்தப்பட்ட உயிரினங்களைக் கொண்ட சிவப்புப் பட்டியலில்" சுமார் 1,840 புதிய உயிரினங்களைச் சேர்த்துள்ளது.
- அச்சுறுத்தப்பட்ட உயிரினங்களைக் கொண்ட சிவப்புப் பட்டியல் என்பது அழிந்து போகும் அபாயமுள்ள தாவரங்கள் மற்றும் விலங்குகள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு பட்டியலாகும்.
- இந்தக் குழுவானது தனது புதுப்பிக்கப்பட்ட சிவப்புப் பட்டியலை ஸ்பெயினின் மாட்ரிட்டில் நடந்த COP25 காலநிலை பேச்சுவார்த்தையின் போது வெளியிட்டது.
- சமீபத்திய திருத்தமானது வெப்பநிலை அதிகரித்து வருவதன் காரணமாக ஆஸ்திரேலியாவில் உள்ள 37% நன்னீர் மீன் இனங்கள் அழிந்து போகும் அபாயத்தில் உள்ளன என்பதைக் காட்டுகின்றது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சுனில் ஷெட்டி - NADAவின் நிறுவனத் தூதர்


- தேசிய ஊக்க மருந்து எதிர்ப்பு நிறுவனமானது (National Anti-Doping Agency - NADA) பாலிவுட் நடிகர் சுனில் ஷெட்டியை தனது நிறுவனத் தூதராகத் தேர்வு செய்துள்ளது.
- NADA என்பது இந்தியாவின் ஊக்க மருந்து எதிர்ப்பு நிறுவனமாகும்.
- இது ஊக்க மருந்து எதிர்ப்பு குறித்த ஆராய்ச்சி மற்றும் கல்வியை ஊக்குவிக்கின்றது. அத்துடன் இது உலக ஊக்க மருந்து எதிர்ப்பு நிறுவனத்தையும் சேர்த்து (World Anti-Doping Agency - WADA) மற்ற ஊக்க மருந்து எதிர்ப்பு அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுகின்றது.




# முக்கிய தினங்கள்

## சர்வதேச நடுநிலைமை தினம் - டிசம்பர் 12

- இது பிப்ரவரி 2017 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஐ.நா பொதுச் சபைத் தீர்மானத்தால் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது. இத்தினமானது அதே ஆண்டு டிசம்பர் 12 அன்று முதன்முதலில் அனுசரிக்கப்பட்டது.
- இத்தினமானது முன்கூட்டிய தடுப்பு இராஜதந்திர உறவுகளின் பயன்பாட்டை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது சர்வதேச உறவுகளில் நடுநிலைமையின் மதிப்பு குறித்த பொது விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இத்தினத்தை அனுசரிக்கின்றது.
- நடுநிலைமை கொண்ட ஒரு நாட்டின் உரிமைகள் மற்றும் கடமைகள் ஆகியவை 1907 ஆம் ஆண்டின் தி ஹேக் ஒப்பந்தத்தில் வரையறுக்கப் பட்டுள்ளன.




## சர்வதேச உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு தினம் - டிசம்பர் 12

- இந்தத் தினமானது 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 12 அன்று நடைபெற்ற ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இந்தத் தினமானது வலுவான மற்றும் நெகிழ் தன்மையுள்ள சுகாதார அமைப்புகள் மற்றும் உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றை வழங்குவதில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருப்பொருள்: "வாக்குறுதியைக் காப்பாற்றுதல்" என்பதாகும்.


"Keep the Promise" UHC Day 2019
UNIVERSAL
HEALTH
COVERAGE
DAY

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★